முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இடைநிலை மனு எண்.09/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.71/2020**

செல்லப்பா ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. அய்யாசாமி
2. திருகாளையப்பன்
3. செல்வி
4. சிவசக்தி
5. அஞ்சலதேவி
6. ஜெயசங்கரி
7. சண்முகசுந்தரம் .... 1 முதல் 7 எதிர்மனுதார்கள் / 1 முதல் 7 பிரதிவாதிகள்
8. கனகராஜ்
9. ஐயப்பன்
10. பாவாடை ... 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் / 8 முதல் 10 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுவானது 29.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கனகராஜா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவிலும் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 6 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.மாடகண்ணு அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தால் இ.ம.எண்.8/2024 ல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.05 16:52:26 +0530

இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18-ன்படி, இந்நீதிமன்றத்திலிருந்து I.A.No.08/2024 மனுவில் பிறந்துள்ள 21.04.2025 தேதிய உத்தரவினை அனுசரித்து இம்மனுவில் கண்டுள்ள 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து அசல் வழக்கின் பிராதை இம்மனுவின் அடியிற்கண்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கில் மனுவில் கண்ட 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க I.A.No.08/2024 மனு தாக்கல் செய்து அதனை நீதிமன்றத்தில் இருந்து 21.04.2025 தேதியில் அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் I.A.No.08/2024 மனுவில் பிறந்துள்ள 21.04.2025 தேதிய உத்தரவினை அனுசரித்து இம்மனுவில் கண்ட 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்யவேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், இதனால் இவ்வழக்கின் தன்மையோ வழக்கு மூலமோ மாறப்போவதில்லை என்றும், ஆகையால் இந்நீதிமன்றத்திலிருந்து I.A.No.08/2024 மனுவில் பிறந்துள்ள 21.04.2025 தேதிய உத்தரவினை அனுசரித்து இம்மனுவில் கண்டுள்ள 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து அசல் வழக்கின் பிராதை இம்மனுவின் அடியிற்கண்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.08.05 16:52:35 +0530

2. **<u>6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை மெமோவின் சுருக்கம்</u>** :–

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லக்கூடியதில்லை என்றும், மனுதாரருக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியதில்லை என்றும், மனுதாரரின் மனுவை எவ்வித விசாரணையுமின்றி தள்ளுபடி செய்யப்படி வேண்டியது சட்டப்படி அவசியமாய் இருக்கிறது என்றும், மனுதாரரின் அபிடவிட்டு பாரா 2ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியில்லை என்றும், எனவே, மனுதாரரின் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை மெமோ, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது இந்நீதிமன்றத்திலிருந்து I.A.No.08/2024 மனுவில் பிறந்துள்ள 21.04.2025 தேதிய உத்தரவினை அனுசரித்து இம்மனுவில் கண்டுள்ள 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து அசல் வழக்கின் பிராதை இம்மனுவின் அடியிற்கண்படி சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேற்படி I.A.No.08/2024–ல் 21.04.2025 அன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி 8 முதல் 10 வரையுள்ள எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 8 முதல் 10 வரையுள்ள பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து பிரதான வழக்குரையை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை. இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.08.05 16:52:46 +0530

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.05 16:52:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.05 16:53:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.09/2025
in
O.S.No.71/2020
உத்தரவு (Draft / Fair)
நாள் : 05.08.2025